**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 154/2018**

| | | |
|---|---|---|
| L.W.14 P.W.: 13 | | |
| D.W. : | | |
| Name : | **ஜெயேந்திரசரஸ்வதி** | Caste : |
| Father's Name : | நடராஜன் | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.12.2021.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருச்சி சிறப்பு நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018ஆம் வருடம் 03.03.2018ஆம் தேதி வேதாரண்யம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 20.00 மணிக்கு செம்போடை மேற்கு சாம்பசிவம் மகன் மனோகரன் என்பவர் கொடுத்த புகாரை பெற்று வேதாரண்யம் காவல் நிலைய குற்ற எண்.36/2018 ச/பி.279,304(ஏ) இ.த.ச. படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அது அ.த.சா.ஆ.7 ஆகும். பின்பு வழக்கு கோப்புக்களை காவல் ஆய்வாளரின் மேல்விசாரணைக்காக வைத்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

முதல் தகவல் அறிக்கையில் காலம் 4ல் புகாரானது எழுத்துமூலமாக குறிப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 போலிசார் தான் அந்த புகாரை எழுதினார்கள் என்று சொல்கிறார் என்றால் சரியல்ல. அ.சா.1 மனோகரன் புகார்வாக்குமூலம் மறைக்கப்பட்டு புதிய புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் முதல் தகவல் அறிக்கை 2 நாட்கள் கழித்து தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 2 நாட்கள் காலதாமதம் மனோகரன் கொடுத்த புகார்

- 2-

வாக்குமூலத்தை மறைத்து வேறு புகார் தயார் செய்ய ஏற்பட்ட காலதாமதம் என்று சொன்னால் சரியல்ல. முன்நேரமிட்டு அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 ன் புகார் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் எதிரி

நின்றிருந்ததாகவும், பின்பு ஓடிவிட்டதாகவும் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. எங்கள் காவல் நிலைய ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 எழுதிக்கொடுத்த புகாரை அ.சா.1 படித்து பார்க்கவில்லை என்று சொல்கிறார் என்றால் சரியல்ல. அச்சு முதல் தகவல் அறிக்கை காலம் 14-ல் புகார்தாரர் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் புகார் வாக்குமூலத்தை மாற்றியமைக்க ஏற்பட்ட காலதாமதத்தினால் புகார்தாரரிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல.